## <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**நாள்** 23.09.2025

**அசல் வழக்கு எண்.110/2011**

**வா.சா.1 – ராஜ்குமார், த/பெ.மயில்வாகனன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களுக்கு எழுதிக் கொடுத்த குத்தகை ஒப்பந்தத்தில் ஒரு ஏக்கருக்கு குறைவாக என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். குத்தகை ஒப்பந்தப்படி நீங்கள் ரூபாய் 6 லட்சம் அட்வான்ஸ் பணம் கொடுத்துள்ளீர்கள் என்றால் கொடுத்துள்ளேன். நீங்கள் வழக்கில் மேலும் இரண்டு லட்சம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் எப்பொழுது கொடுத்தீர்கள் அதற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் மூன்று மாதம் கழித்து கொடுத்தேன். ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை பணமாக தான் கொடுத்தேன். கடந்த 12.03.2008இல் வாடகைக்கு எடுத்து 01.05.2009 நோட்டீஸ் கொடுக்கும் வரை இடத்திற்கான வாடகையை நீங்கள் செலுத்தவில்லை என்றால் வாடகை கொடுக்கவில்லை. உங்களுக்கு வழக்கறிஞர் வாயிலாக குத்தகை பணம் கொடுக்கவில்லை என்று அறிவிப்பு கொடுத்த பிறகுதான் வழக்கு சொத்தில் தண்ணீர் இல்லை என்று தொழில் செய்ய முடியவில்லை என்று பதில் கொடுத்தீர்கள் என்றால் சரிதான். தரப்பினர்களுக்கிடையே தேவையில்லை என்று கருதினால் மூன்று மாத அறிவிப்பு கொடுத்துவிட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ளலாம் என்று சரத்து உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வரை உடன்படிக்கையை ரத்து செய்து பணத்தை திரும்ப கொடுங்கள் என்று நீங்கள் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் அறிவிப்பு கொடுத்துள்ளேன். தொழில் செய்யும் இடத்தில் தண்ணீர் இல்லை என்பதை நீங்கள் எப்போது கண்டுபிடித்தீர்கள் என்றால் குத்தகை ஏற்படுத்திய ஒரு வாரத்தில் தண்ணீர் இல்லை என்பதை கண்டுபிடித்துவிட்டேன். தண்ணீர் இல்லை என்று பணத்தை திரும்ப கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளேன். நிலத்திலிருந்த இயந்திரங்கள் யாருடையது என்றால் பிரதிவாதிகள் உடையது தான். நீங்கள் அதனை கிரேன் வைத்து அகற்றி எடுத்து சென்றுவிட்டீர்கள் என்றால் அங்கு இருந்த இயந்திரங்கள் திருடு போனதால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு நான் எடுத்துச் சென்று விட்டேன். என்ன பொருள் காணாமல் போனது எப்பொழுது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்கள் என்றால் 10 அச்சு காணாமல் போய்விட்டது. ஆகவே பாலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீங்கள் புகார் கொடுத்த தேதி 16.10.2009 என்றால் சரிதான். கடந்த

15.10.2009 அன்று நீங்கள் இயந்திரங்களை அகற்றி சென்றுவிட்டதாக பிரதிவாதிகள் புகார் கொடுத்துள்ளார்கள் தெரியுமா என்றால் தெரியும். உயர் நீதிமன்றத்தில் டைரக்ஷன் வாங்கி முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா தெரியாதா என்றால் தெரியும். அந்தப் புகாருக்கு உங்களை விசாரிக்க அழைத்த பொழுது நீங்கள் எழுதிக் கொடுத்த பதில் உங்களிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது நான் கொடுத்த புகார் நகல் ஆகும். புகாரில் யாருடைய கிரீன் எந்த கிரேன் என்று எண்கள் போட்டு எழுதி கொடுத்துள்ளார்கள் அது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் எடுத்துச் சென்ற இயந்திரங்களை இதுநாள் வரை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அந்த இயந்திரத்தின் மதிப்பு வழக்கில் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. இயந்திரம் இயங்கும் வரை மின்சார கட்டணம் செலுத்தினீர்கள் என்றால் சரிதான். உங்களால் தொழில் செய்ய முடியாததால் நீங்கள் இயந்திரங்களை திருடி சென்றுவிட்டதாக உங்கள் மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியில்லை. உங்களுடைய உடன்படிக்கையில் என்னென்ன இயந்திரங்கள் ஒப்படைக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்தந்த இயந்திரங்களை எடுத்துச் சென்றீர்கள் எந்த எந்த இயந்திரங்களை விட்டுச் சென்றீர்கள் என்று உங்களுடைய வழக்குரையில் மற்றும் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். நீங்கள் இயந்திரங்களை எடுத்துச் சென்றுவிட்டதாக சொல்லி விட்டீர்கள் அதனை எங்கு வைத்துள்ளீர்கள் என்று வழக்கிலும் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். இயந்திரங்கள் என்னிடம் தான் உள்ளது. நீங்கள் சுமார் 8 லட்ச ரூபாய் மதிப்புடைய இயந்திரங்களை எடுத்துச் சென்றுவிட்டீர்கள் அவர்களும் உங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியில்லை. இயந்திரங்களை ஒப்படைக்க தயாராக இருக்கிறேன். இன்றைய தேதியில் அந்த இயந்திரங்கள் துருப்பிடித்து பயனற்று போய்விட்டது சரியா என்றால் சரியில்லை. உங்களால் பிரதிவாதிக்கு தான் இழப்பு ஏற்பட்டுள்ளது நீங்கள் தான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.